டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in
agridoctor.in | 22.9.2024 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள் 31 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 081 - Madurai | Online Edition

கல்யாண் ஜுவல்லர்ஸ்

# வேளாண் நிறுவனத்தின் நூற்றாண்டு விழாவில் குடியரசுத் தலைவர் பங்கேற்பு

புது தில்லி, செப்.21

ஜார்க்கண்ட் மாநிலம் ராஞ்சியில் நடைபெற்ற இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சிலின் தேசிய இடைநிலை வேளாண்மை நிறுவனத்தின் நூற்றாண்டு விழாவில் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு கலந்து கொண்டார். நிகழ்ச்சியில் பேசிய குடியரசுத் தலைவர், விவசாயத்தை லாபகரமான தொழிலாக மாற்றுவதைத் தவிர, 21-ம் நூற்றாண்டில் விவசாயத்தின் முன் மேலும் மூன்று முக்கிய சவால்கள் உள்ளன என்றார். இது உணவு மற்றும் ஊட்டச் சத்து பாதுகாப்பு, வளங்களின் நிலையான பயன்பாடு மற்றும் பருவநிலை மாற்றத்தை பராமரித்தல் ஆகும் என அவர் கூறினார்.



இடை நிலை விவசாயம் தொடர்பான நடவடிக்கைகள் இந்த சவால்களை எதிர்கொள்ள உதவும் என்று அவர் கூறினார். இந்தியாவில் அரக்கு அதிகமாக பழங்குடியின சமூகத்தினரால் உற்பத்தி செய்யப்படுகிறது என்று குடியரசுத் தலைவர் கூறினார். இது அவர்களின் வருமானத்திற்கு ஒரு முக்கிய ஆதாரமாகும் என அவர் குறிப்பிட்டார்.

நிகழ்ச்சியில் பேசிய மத்திய வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சர் சிவ்ராஜ் சிங் சௌகான், அரக்கின் வரலாறு பழமையானது என்று கூறினார். இன்றைய கால கட்டத்தில் அரக்கு அதிக முக்கியத்துவம் வாய்ந்த்தாக உள்ளது என்று அவர் தெரிவித்தார். பாரம்பரிய விவசாயத்துடன் மற்ற விவசாயத்தையும் நோக்கி நாம் செல்ல வேண்டும் என்று அமைச்சர் கூறினார். வேளாண் காடுகள் அதாவது மரங்களி லிருந்து கிடைக்கும் வருமானம் குறித்தும் மத்திய அரசு கவனம் செலுத்துவதாக அவர் தெரிவித்தார். இந்த அனைத்து அம்சங்களையும் நாம் சிந்தித்தால், அரக்கு விவசாயம் மிகவும் முக்கியமானது என்று அவர் கூறினார். 400 கோடி ரூபாய் மதிப்பில் அரக்கு ஏற்றுமதி செய்யப்படுவதாக அவர் கூறினார். எனவே நமது வருமானத்தை அதிகரிக்க அரக்கு முக்கியமானது என அவர் தெரிவித்தார். அரக்கு உற்பத்தி வனத்துறையின் கீழ் வருகிறது என்று கூறிய சௌகான், எனவே அரக்கு உற்பத்தி செய்யும் விவசாயிகள் வேளாண் துறையின் திட்டங்களின் பலனைப் பெறுவதில்லை என்று கூறினார். நாடு முழுவதும் அரக்கு ஒரு விவசாய பொருளாக அங்கீகரிக்கப்பட முயற்சி எடுக்கப்படும் என அவர் தெரிவித்தார். பதப்படுத்தும் பணிகளை எளிமையாகி, விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்கும் வகையில், அரக்கு அலகுகளை அமைப்பதில் அரசு கவனம் செலுத்தும் என்றும் சிவராஜ் சிங் சௌகான் கூறினார். பழங்குடியினர் விவகார அமைச்சகத்துடன் இணைந்து, குறைந்தபட்ச ஆதரவு விலையை (எம்.எஸ்.பி) நிர்ணயிக்க முயற்சி எடுக்கப்படும் என்று அவர் உறுதியளித்தார்.

மத்திய வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை இணையமைச்சர் பகீரத் சவுத்ரி தனது உரையில் விவசாயிகள் செழித்தால் தான் நாடு வளர்ந்த நாடாக மாற முடியும் என்று கூறினார்.

ஜார்க்கண்ட், சத்தீஸ்கர் மற்றும் ஒடிசாவின் பல பழங்குடி சமூகங்களுக்கு அரக்கு சாகுபடி முக்கிய வருமான ஆதாரமாக உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நெல்லிக்காயிலிருந்து மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி

கோயம்புத்தூர், செப்.21

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நெல்லிக் காயிலிருந்து மதிப்பூட்டப்பட்டபொருட்கள் தயாரிக்கும் பயிற்சி 24 மற்றும் 25.9.24 ஆகிய இரண்டு நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை, அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், (வாயில் எண்.7, மருதமலை சாலை வழி) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641003ல் நடைபெறும்.

கீழ்கண்ட உணவு பொருட்களை தயாரிப்பதற்கு பயிற்சி வழங்கப்படும்.

- நெல்லி பானங்கள் - பழரசபானம் மற்றும் தயார் நிலை பானம்
- நெல்லி ஜாம்
- தேன் நெல்லி, நெல்லி கேண்டி, நெல்லி மிட்டாய், பொடி மற்றும் துருவல்

ஆர்வமுள்ளவர்கள் ரூ.1,770/-(ரூ.1500 ரூ முளுகூ 18%)- பயிற்சி முதல் நாளன்று செலுத்த வேண்டும்.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடைபின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003. தொலைபேசி எண் : 94885 18268, மின்னஞ்சல் : phtc@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் முன்னாள் மாணவர்கள் சந்திப்பு

கோயம்புத்தூர், செப்.21

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 1986 ஆம் ஆண்டு இளநிலை வேளாண்மை அறிவியல் பயின்ற வேளாண் மாணவர்கள் 38 வருடங்களுக்கு பிறகு நேற்று (21.9.24) பல்கலைக்கழக வளாகத்தில் சந்தித்து தங்களது நினைவுகளை பகிர்ந்து கொண்டனர். இம்முன்னாள் மாணவர்களில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் வெ கீதா லட்சுமி, முன்னாள் ஐஜி பெரியய்யா, பல்கலைக்கழக முதன்மையர் (மாணவர் நலம்) முனைவர் நா.மரகதம் மற்றும் பல்வேறு முதன்மை வங்கிகளின் அதிகாரிகள், கரும்பு இனப் பெருக்க நிறுவனத்தின் ஆராய்ச்சி யாளர், உர கண்காணிப்பு அதிகாரி என பல்வேறு துறைகளின் உயர் பதவிகளில் இருக்கும் அனைவரும் கலந்து கொண்டனர். இந்த நெகிழ்ச்சியான தருணத்தினை தங்கள் குடும்பத் தினருடன் கலந்து கொண்டு தங்கள் மகிழ்ச்சியினை பரிமாறிக் கொண்டனர்.





## கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் 21.09.2024

| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கத்திரி(Hybrid) | 30 | 34 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 30 | 36 | 57 | உருளை (பிற) | 36 | 40 |
| 1B | கத்திரி(Nadu) | 50 | 54 | 57A | உருளை(ஊட்டி) | 60 | 66 |
| 2 | வெண்டை | 25 | 28 | 58 | மேரக்காய் | 20 | 24 |
| 3 | தக்காளி (நாடு) | 30 | 33 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 30 | 36 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 25 | 28 | 60 | கேரட் | 50 | 55 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 30 | 34 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 36 | 42 |
| 6 | புடலை | 25 | 30 | 62 | நூல்கோல் | 40 | 46 |
| 7 | பீர்க்கன் | 25 | 30 | 63 | டர்னிப் | 45 | 50 |
| 8 | சுரைக்காய் | 18 | 24 | 64 | மு.கோஸ் | 16 | 20 |
| 9 | பாகற்காய் | 30 | 35 | 65 | மு.கோஸ்(கலர்) | 30 | 35 |
| 10 | கொத்தவரை | 25 | 28 | 66 | காளிபிளவர் | 45 | 50 |
| 11 | பூசணி | 15 | 18 | 67 | பட்டாணி | 190 | 200 |
| 12 | அரசாணி | 15 | 18 | 68 | பூண்டு | 260 | 314 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 30 | 35 | 69 | இஞ்சி | 60 | 136 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 30 | 35 | 70 | புருக்கோலின் | 100 | 120 |
| 15 | சி.வெங்காயம் | 42 | 46 | 71 | பென்னி பீன்ஸ் | 45 | 50 |
| 16 | பெ.வெங்காயம் | 44 | 56 | 72 | குடமிளகாய் | 48 | 55 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 22 | 25 | 73 | ஊட்டி அவரை | 120 | 140 |
| 18 | பச்சை மொச்சை | 50 | 55 | 74 | பஜ்ஜி மிளகாய் | 40 | 45 |
| 19 | முருங்கை | 44 | 48 | 71A | | | |
| 20 | தேங்காய் | 42 | 45 | | | | |
| 21 | | | | | | | |
| 22 | வாழைக்காய் | 35 | 38 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 60 | 65 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 90 | 95 | 75 | எலுமிச்சை | 135 | 144 |
| 25 | சேப்பங்கிழங்கு | 55 | 58 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 50 | 65 |
| 26 | மரவள்ளி | 30 | 34 | 77 | | | |
| 27 | சர்க்கரைவள்ளி | 42 | 48 | 78 | பப்பாளி | 35 | 38 |
| 28 | கறிவேப்பிலை | 25 | 30 | 79 | மாதுளை | 200 | 240 |
| 29 | கொத்தமல்லி | 110 | 115 | 80 | திராட்சை | 100 | 110 |
| 30 | புதினா | 10 | 11 | 81 | மாம்பழம் | 100 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 12 | 15 | 82 | ஆப்பிள் / காலா | 200 | 240 |
| 32 | தண்டுக்கீரை | 12 | 15 | 83 | ஆரஞ்ச் | 90 | 100 |
| 33 | சுக்கிட்டி&வெந்தயம் | 18 | 20 | 84 | சாத்துக்குடி | 45 | 50 |
| 34 | அரைக்கீரை | 12 | 15 | 85 | அன்னாசி பழம் | 60 | 70 |
| 35 | சிறுகீரை | 12 | 15 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | பாலாக்கு | 12 | 15 | 87 | முலாம்பழம் | 50 | 55 |
| 37 | பருப்புக்கீரை | 12 | 15 | 88 | தர்பூசணி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | | | |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 70 | 75 |
| 40 | கோவக்காய் | 25 | 30 | 91 | பூவன் | 50 | 55 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 55 | 60 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 55 | 60 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 34 | 38 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 18 | 22 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 30 | 35 | 96 | நேந்திரன் | 35 | 40 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 25 | 28 | 97 | செவ்வாழை | 80 | 85 |
| 47 | சுண்டக்காய் | 140 | 150 | 98 | பேரிக்காய் | 120 | 160 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 40 | 45 |
| 49 | | | | 100 | கறிப்பலா | 35 | 40 |
| 50 | நிலக்கடலை | 60 | 64 | 101 | டிராகன் ப்ரூட் | 150 | 160 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 70 | 80 |
| 52 | | | | | | | |
| 53 | ஸ்வீட் கார்ன் | 35 | 40 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 30 | 33 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 32 | 38 | | | | |

# சிறுதானியங்கள் உற்பத்தி மற்றும் மதிப்பு கூட்டுதல் குறித்தான மாவட்ட அளவிலான கண்டுணர் சுற்றுலா

மதுரை, செப்.21

மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டாரம், மாநில விரிவாக்கத் திட்டங்களின் உறுதுணை சீரமைப்பு திட்டம் அட்மா திட்டத்தின் மூலம் சிறுதானியங்கள் உற்பத்தி மற்றும் மதிப்பு கூட்டுதல் குறித்தான மாவட்ட அளவிலான கண்டுணர் சுற்றுலாவில் மதுரை வேளாண்மை கல்லூரி KVK பேராசிரியர்கள் மூலம் பயிற்சி வழங்கப்பட்டது. இதில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் செயல்படுத்தப்படும் கிராமங்களில் இருந்து 50 விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டது. முனைவர் சுப்ரமணியன் சிறுதானிய சாகுபடி தொழில்நுட்பம் பற்றி கூறும்போது பாரம்பரியமிக்க நமது உணவு வகைகளை சாகுபடி செய்து நம் உணவில் சேர்த்துக் கொள்ளும் போது ஊட்டச்சத்து உடன் உடல் ஆரோக்கியம் நோய் எதிர்ப்பு சக்தி நமக்கு இயல்பாக நடக்கிறது.

நஞ்சில்லாத வேளாண்மை மூலம் நமது சுற்றுச்சூழல் மண் வளம் காக்கப்படுகிறது. ரசாயன உரம் பூச்சி மருந்து இல்லாமல் குறைந்த இடுபொருள் கொண்டு அதிகமான வருமானம் விவசாயிகள் பார்க்கலாம். மானாவாரியாகவும் இறவையிலும் அனைத்து விவசாயிகளும் முதலில் தங்கள் உணவு தேவைக்கு கண்டிப்பாக பயிர் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

முனைவர் நிர்மலா, சிறு தானியங்களில் மதிப்பு கூட்டுதல் சம்பந்தமாக செயல்முறையாக செய்து காண்பித்து விவசாயி களுக்கு பயிற்சி அளித்தார். விவசாயிகள் தங்கள் உற்பத்தி பொருட்களை மதிப்பு கூட்டி விற்கும் போது கூடுதல் லாபம் பெற முடியும். சிறு குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை அனைவரும் எடுத்துக் கொள்ளும் ஒரு உணவாக சிறுதானியம் இருக்கிறது என்றார்.

வேளாண்மை உதவி இயக்குனர் மயில் வழிகாட்டுதல்படி அட்மா வட்டார தொழில்நுட்ப மேலாளர் புஷ்பமாலா 50 விவசாயிகளுக்கும் வேளாண்மை கல்லூரியில் சிறு தானியம் சாகுபடி செய்திருக்கும் நிலங்களை பார்வையிட்டு விவசாயின் சந்தேகங்களுக்கு கல்லூரி பேராசிரியர் உடன் விவசாயிகள் விவாதிக்க ஏற்பாடு செய்திருந்தார்.

# உயிர்மச் சான்று பெற விவசாயிகள் விண்ணப்பிக்கலாம்

புதுக்கோட்டை, செப்.21

புதுக்கோட்டைமாவட்ட விதைச்சான்று மற்றும் உயிர்மச்சான்று உதவி இயக்குநர் மு.மதியழகன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது, தற்போது அதிகளவில் பூச்சிக் கொல்லிகள் பயன்படுத்துவதால் சுற்றுச்சூழலில் நன்மை செய்யும் பூச்சிகளான சிலந்தி, தட்டான், குளவி போன்றவற்றின் எண்ணிக்கை கணிசமாக குறைந்து வருகிறது. ரசாயன உரங் களினாலும், பூச்சி மருந்துகளாலும் உணவு சங்கிலி நஞ்சாக் கப்பட்டு அதிகளவில் சேமிக்கப்பட்டு பல வகையான நோய் களை மனிதர்களுக்கு ஏற்படுத்துகின்றது. மேலும் மண்ணின் வளம் குன்றுதல், சிறுபான்மை பூச்சிகள் பெரும்பான்மை பூச்சிகளாக மாறுதல் போன்ற பாதகங்கள் ஏற்படுகின்றது.

எனவே, இந்த சூழ்நிலையை கருத்தில் கொண்டு எதிர்கால சந்ததியை காக்க விவசாயிகள் நீடித்த நிலையான இயற்கை விவசாயத்திற்கு மாறுவது காலத்தின் அவசியம் ஆகும்.




இயற்கை விவசாயம் அல்லது உயிர்ம வேளாண்மை என்பது முற்றிலும் செயற்கை இடுபொருட்களான உரங்கள், பூச்சிக் கொல்லிகள், களைக்கொல்லிகள் மற்றும் மரபணு மாற்றப்பட்ட பயிர்களை தவிர்த்து இயற்கை எரு,பசுந்தாள் உரங்கள், மண்புழு உரம், பஞ்சகவ்யம், வேம்பு தாவரங்கள் சார்ந்த இடுபொருட்களை பயன்படுத்தி செய்யப்படும் ஒரு தற்சார்பு முறையாகும்.

விவசாயிகள் இயற்றை கவிவசாயம் செய்வதை ஊக்குவிக்க மத்திய மற்றும் மாநில அரசுகள் பல்வேறு திட்டங்களை செயல் படுத்தி வருகிறது. இயற்கை வழி விவசாயத்தில் விதை முதல் உற்பத்தி, அறுவடை, விளைபொருட்கள் விற்பனை வரை அனைத்து நிலைகளிலும் கடைபிடிக்க வேண்டிய சில தர நிர்ணயங்கள் வகுக்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் இயற்கை விளைபொருட்கள் உற்பத்தி செய்தல், பதனிடுதல் மற்றும் விற்பனைக்கு மத்திய அரசின் தேசிய உயிர்ம வேளாண்மை திட்டத்தின்படி அபீடா நிறுவனத்தின் அங்கீகாரத்தின் அடிப்படையில் உயிர்மச் சான்று எனப்படும் இயற்கை வேளாண் சான்று வழங்கப்பட்டு வருகிறது.

உயிர்மச் சான்று பெற தனி நபராகவோஅல்லது குழுவாகவோ பதிவு செய்யலாம். மேலும் வனப்பொருட்களை சேகரிப்பு செய்பவர்களும் பதிவு செய்து கொள்ளலாம். பெரு வணிக நிறுவனங்களும் அங்கக பொருட்களை பதப்படுத்துவோர் மற்றும் ஏற்றுமதி செய்வோரும் பதிவு செய்யலாம். தனி நபர் சிறு, குறு விவசாயிகள் எனில் ரூ.2700/-ம், தனி நபர் பிற விவசாயிகள் எனில் ரூ.3200/-ம், குழுப் பதிவு எனில் ரூ.7200/-ம், வணிக நிறுவனம் எனில் ரூ.9400/-ம், பதிவு கட்டணமாக செலுத்த வேண்டும்.

உயிர்மச் சான்றிதழ் பெற விண்ணப்பபடிவம் பண்ணையில் பொது விவர குறிப்புகள், பண்ணையின் வரைபடம், மண் மற்றும் பாசன நீர் பரிசோதனை விவரம், ஆண்டு பயிர் திட்டம் துறையுடனான ஒப்பந்தம் மூன்று நகல்கள், நில ஆவணம், வருமான வரி கணக்கு எண் அட்டை, ஆதார் அட்டை, புகைப்படம் மற்றும் உரிய கட்டணத்துடன் விண்ணப்பிக்கலாம். மேலும் விவரங்களுக்கு புதுக்கோட்டை மாவட்ட விதைச்சான்று மற்றும் உயிர்மச் சான்று உதவி இயக்குநர் அலுவலகத்ததை தொடர்பு கொள்ளலாம்.


நானோ யூரியா பிளஸ்
20 சதவீதம்
தழைச்சத்து கொண்ட நானோ திரவம்
500 மிலி
ரூ.225/-
IFFCO
NANO
UREA
PLUS
இலைவழி
தெளிப்பு
1லி. நீருக்கு
5 மி.லி
ஒரு ஏக்கருக்கு, ஒரு தெளிப்பிற்கு 500 மி.லி
முதல் தெளிப்பு - முக்கிய வளர்ச்சி
பருவமான கிளைப்பு | தூர்விடும் தருவாய்
இரண்டாம் தெளிப்பு - பூக்கும் பருவத்திற்கு முன்
அனைத்து பயிர்களுக்கும் ஏற்றது.

# நெல் மற்றும் உளுந்து விதைப்பிற்கான ஆயத்த பயிற்சி



சிவகங்கை, செப்.21

ரீலையன்ஸ் பவுண்டேஷன் சார்பாக சிவகங்கை மாவட்டத்திலுள்ள சிங்கம்புணரி, எஸ்.புதுார் மற்றும் சாக்கோட்டை வட்டாரத்தில் உள்ள விவசாயிகளிடத்தில் நேரடி கள ஆய்வு மற்றும் டிஜிட்டல் பண்ணை பள்ளி நெல் மற்றும் பயறு வகை (உளுந்து) பயிருக்கான ஆயத்த பயற்சி பெத்தனேந்தல் ஆம்பக்குடி மற்றும்பூலான் குறிச்சி கிராம விவசாயிகளுக்கு பயிற்சி 19.9.24 அன்று நடைபெற்றது. பயிற்சியை துவக்கி வைத்து மாவட்ட திட்ட மேலாளர் ஸ்ரீகிருபா பேசுகையில், கடுமையான வெயில் அடிப்பதால் விரைவில் மழை வரும் போது மானாவாரி நெல் மற்றும் பயறுவிதைக்கான விதைகள் மாவட்டத்திலுள்ள அனைத்து வேளாண்மை விரிவாக்க மையத்தில் உள்ளதால் வாங்கி தயாராக வைத்திருக்கவும் என்றார். இந்த பண்ணை பள்ளி விவசாயிகளுக்கு தேவையான சாகுபடி தகவல்கள் (A TO Z) வரை வாய்ஸ் மெமேசிஸ், வாட்சாப் ஆடியோ கான்பரன்ஸ் வாயிலாக வழங்கப்படும் என்றார். அப்போது ஏற்படும் சந்தேகங் களை தீர்வு காண கட்டணமில்லாத அலைபேசி வாயிலாக 1800 419 8800 என்ற எண்ணில் தொடர்பு கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொண்டார்.

விவசாய நண்பர்களே ...
விவசாயம் சம்பந்தமாக உங்கள் சந்தேகங்களுக்கு...
ரிலையன்ஸ் பவுண்டேசனின்
கட்டணமில்லா உதவி தொலைபேசி எண்ணில் விளக்கம் பெறலாம்
1800-419-8800
Reliance Foundation

கால்நடைகளுக்கு நமக்கு இருக்கும் 108 ஆம்புலன்ஸ் மாதிரி ஒவ்வொரு வட்டாரத்திற்கும் 1962 என்ற எண்ணை அழைத்தால் கால்நடை ஆம்புலன்ஸ் (VERTINARY AMBULANCE) வரும் என்றார்.

இந்நிகழ்வில் தொழில்நுட்ப வல்லுநர் சந்திரசேகரன் கலந்து கொண்டு நெல் மற்றும் பயறு வகை சாகுபடிக்கான தொழில் நுட்பங் களை எளிய முறையில் விதைநேர்த்தி செய்வது குறித்து செய்து காட்டினார். மானாவாரி நெல்லுக்கு வறட்சியை தாங்கிட ஒரு கிலோ நெல்லுக்கு 10 கிராம் பொட்டாஷ் கலந்து 1 லிட்டர் தண்ணீர் என்ற அளவில் 16 மணி நேரம் ஊற வைத்து பின் நிழலில் காயவைத்து

விதைக்க கூறினார். மண்வள அட்டை பரிந்துரை படி உரமிடுவதால் மண் வளமும் மேம்படுத்துவதுடன் உரத்திற்கான செலவும் குறையும் என்றார். உளுந்து பயிர் விதை மூலமாக பரவும் வேர் வாடல், வேர் அழுகல் போன்ற நோய்களை (குச்சி நோய்) கட்டுப் படுத்த விதை நேர்த்தியாக ஒரு கிலோ பயறு விதைக்கு 4 கிராம் விரிடி கலந்து, 24 மணி நேரம் கழித்து உயிர் உரங்களான ரைசோபியம், பாஸ்போ பேக்டீரியா கலந்து விதைக்க எடுத்துக் கூறினார். சில இடங்களில் மானாவாரியாக நெல் விதைக்க பட்ட வயலை பார்வையிட்டு, அடியுரம் இடுவது குறித்து விளக்கபட்டது. இந்நிகழ்வில் முன்னோடி விவசாயிகளான ராமு, சரண்யா, காந்தி மதி, வள்ளி, பானுமதி, ராதிகா மற்றும் மலையப்பன் , தங்கசாமி, தியாகராஜன், கூடலிங்கம் போன்றோர் கலந்து கொண்டனர்.



# வேர் அழுகல் மற்றும் வேர் வாடல் நோய்களின் வேறுபாட்டை எவ்வாறு? கண்டிபிடிப்பது? தெரியுமா?




பொதுவாக கிராமங்களில் உள்ள விவசாயிகளுக்கு இந்த வேர் அழுகல் (ROOT ROT) மற்றும் வேர் வாடல் (WILT) க்கும் உள்ள வேறுபாட்டை கண்டிபிடிப்பது மிகவும் கஷ்டமாக தான் இருக்கும். இதனுடைய தாக்குதல் அறிகுறிகள் கிட்டதட்ட ஒரே மாதிரியாக இருந்தாலும் தடுப்பதற்கான நடவடிக்கைகள் வேறு மாதிரியாக தான் உள்ளது. இன்னும் சிலருக்கு பூச்சியால் உண்டானதா அல்லது நோய்கள் உருவானதா என்பதில் பல்வேறு ஐயப்பாடுகள் உள்ளது.

பூச்சி மருந்து கடையில் தாக்கப்பட்ட மாதிரி கண்பித்தால் அவர்களும் ஒரு சில நேரங்களில் ஏதாவது இரண்டு மருந்தை (நோய்+பூச்சி) கொடுப்பதுடன் அல்லாமல் ஒரு பயிர் பூஸ்டர்/ டானிக் யும் கலந்து கொடுத்து தெளிக்க கூறுகின்றனர். இதனால் கூடுதலான செலவு ஆவதுடன் பணமும் காலமும் விரயமாகிறது. இந்த பதிவில் அதற்கான வேறுபாடுகள் எவ்வாறு உண்டாகிறது என்பதை பார்ப்போம்.

## வேர் அழுகல் (ROOT ROT)

இது பயிரின் திசுக்களின் சிதைவால் அழுகல் ஏற்படுகிறது. இது பெரும்பாலும் பூஞ்சை, பாக்டீரியா அல்லது எப்போதாவது வைரஸ் தொற்றுகளால் ஏற்படுகிறது. களிமண் நிலங்களிலும் வடிகால் வசதியற்ற இடங்களிலும் வேர் அழுகல் நோய் வர வாய்ப்புள்ளது.

## பாதிப்பின் அறிகுறி தெரியுமா?

பாதிக்கப்பட்ட பாகங்கள் (வேர், தண்டு ) நிறமற்றதாகவும், மென்மையாகவும் மிருதுவாகவும் மாறும். இந்த நோயால் வேர்கள் பழுப்பு / கருப்பு நிறமாக மாறி அவற்றின் பிடிமானத்தை இழக்கின்றன. கடைசியாக வாடி வதங்கி இறந்து விடும். இந்த நோய் வேர் அழுகல், பழுப்பு அழுகல், வேர் எம்பிராய்டரியாகவும் பைட்டோ தாரா வாகவும் பிரிக்கலாம்.

**அழுகல்**

தொடங்கியவுடன் பாதிக்கப்பட்ட திசுக்களை காப்பாற்ற வேண்டும். மேலும் பரவுவதை தடுக்க உரிய நடைமுறைகளை மேற்கொள்ள வேண்டும்.

**வேர் வாடல் (ROOT WILT)**

இந்த நோய் தாவரத்தின் திசுக்களுக்கு நீர் சென்றடையதால் வாடல் ஏற்படுகிறது.

இதற்கு பல காரணங்கள் இருந்தாலும் போதுமான மழையின்மையால் ஏற்படும் வறட்சி, வேர் சேதம் வாஸ்குலர் பாதிப்பு மற்றும் பியூசோரியம், வெர்ட்டிசிலியம் போன்ற பூஞ்சானங்களால் ஏற்படும் பாதிப்பால் உருவான வாடல் போன்ற காரணங்களும் இருக்கலாம்.




**அறிகுறி**

வாடல் நோயினால் செடிகள் நிமிர்ந்து நிற்காமல் தொங்கி போதல், இலைகள் பிடிப்பு இல்லாமல் வாடுதல், பின் வாடி வலுவிழந்த நிலையில் காய்ந்து போகும்.

வாடல் நோய் தற்காலிகமானது என்றாலும் நீடித்த வாடல் நிரந்தர சேதத்தை உண்டாக்கும். ஆரம்பகால கட்டத்தில் போதுமான நீர்ப்பாசன வசதி அல்லது ஊட்டச்சத்துகள் வழங்கினால் இந்த நோயிலிருந்து விடுபடலாம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**


Stanes
BIO NEMATON
Bio Pesticide
Paecilomyces lilacinus
1.15% Powder Formulation
பயோ நெமட்டான்
பயிரின் வேர்களை தாக்கும் நூற்புழு பிரச்சனையா?
பயன்படுத்துவீர்...
பயோ நெமட்டான்
"நூற்புழுக்களின் எதிரி"
இது வேர்களைத் தாக்கும் தீமை செய்யும் நூற்புழுக்களையும் அதன் முட்டைகளின் செயல்பாட்டையும் தடுக்கிறது.
• ஆரோக்கியமான வேர் வளர்ச்சிக்கு உதவுகிறது.
• பூஞ்சாண (அ) பாக்டீரியா நோய்கள் வரும் அபாயத்தை குறைக்கிறது.
• மேலும் நல்ல மகசூல் கிடைக்க வழிவகை செய்கிறது.
வேர் முடிச்சுகள்
வேர் வீக்கம்
வேர் அழுகல்
டி ஸ்டேன்ஸ் அண்ட் கம்பெனி லிமிடெட்
8/23-24, ரேஸ் கோர்ஸ்,
கோவை-641018.
www.tstanes.com
84899 04949
தமிழ்நாடு மேலாளர் : 91 93449 14955
கோவை, ஈரோடு : 91 93449 14956
சேலம் : 91 93449 14948
திருச்சி : 91 93449 14943
மதுரை : 91 93449 14935
வேலூர் : 91 93449 14938

# உங்களை தேடி உங்கள் ஊரில் திட்ட கள ஆய்வில் மாவட்ட ஆட்சியர்



கடலூர், செப்.21

கடலூர் மாவட்ட ஆட்சியரால் உங்களை தேடி உங்கள் ஊரில் திட்ட பணிகள் கள ஆய்வு கடந்த 18.9.24 அன்று மேற்கொள்ளப்பட்டது.

கடலூர் வேளாண்மை இணை இயக்குனர் ஏ.ஜெ. கென்னடி ஜெபக்குமார் தலைமையில், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் நீ.செல்வம், ஸ்ரீமுஷ்ணம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் கொண்ட குழு மாவட்ட ஆட்சியரை, வேளாண்மைத் துறையின் பல்வேறு திட்டப் பணிகளின் ஆய்வு செய்ய அழைத்துச் சென்றனர். ஆதிவராகநல்லூர் முகிலனின் ஒரு கிராமம் ஒரு பயிர் திட்டத்தின் அங்கமான நெல் இயந்திர நடவு செயல்விளக்கம் காண்பிக்கப்பட்டது. பரந்தாமனின் விளை நிலத்தில் பசுமைப் போர்வை இயக்கத்தில் வழங்கிய மரக்கன்று களான தேக்கு, மஹாகனி, வேங்கை ஆகியவற்றின் வளர்ச்சி நிலையினை ஆய்வு செய்தார். மூலிகை தோட்டத்தில், மூலிகை பயிர்களின் கண்காட்சியினை பார்வையிட்டார். ஸ்ரீமுஷ்ணம் வேளாண்மை விரிவாக்க மையத்தை மாவட்ட ஆட்சியர் ஆய்வு செய்தபோது. பணமில்லா பரிவர்த்தனை மூலம் இடுபொருள் வழங்கும் திடத்தை கிடங்கு மேலாளர் வினோத்குமார் கணிணியும் இணைக்கப்பட்ட பிஓஎஸ் இயந்தரம் மூலம் டெபிட் கார்டு கொண்ட செயல்விளக்கம் செய்து காண்பித்தார். மேல்புளியங்குடி கிராமத்தில் பாரியின் நெல் வயலில் வயல் சூழல் திடலில், 25 விவசாயி களுக்கான பயிற்சி வகுப்புகளை ஆய்வு செய்தார். வேளாண்மை அலுவலர் அ.அமுதா, பொறுப்பு அலுவலர் ஒருங்கிணைந்த வயல் சூழல் ஆய்வு முறையால் பூச்சி / நோய் கண்காணிப்பு முறைகளை விளக்கினார். முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தில் உயிர் வேளாண்மை பண்ணை திடல் ஆய்வு செய்தார். சாத்தப்பாடி செல்வவதி கடந்த 9 ஆண்டுகளாக இயற்கை முறையில் சாகுபடி செய்யப்படும் பண்ணையையும், இயற்கை பயிர் ஊக்கிகளான ஜீவாம்ருதம், மீன் அமிலம், இயக்கை பூச்சி விரட்டி, வேப்பங்கொட்டை கரைசல் ஆகிய தயாரிப்புகளை பார்வையிட்டார். சீரக சம்பா நெல் நாற்றங்காலினையும் பார்வையிட்டார். இயற்கை விவசாயிகளின் பயிற்சியில் கலந்து கொண்டு. மதிப்பு கூட்டிய பொருள் உற்பத்தி மையம் மற்றும் சந்தைப்படுத்த தேவையான நிதி ஆதார உதவிகள் குறித்து விவசாயிகளுடன் ஆலோசனை செய்தார்.

கள அய்வுக்கான ஏற்பாடுகளை துணை வேளாண்மை அலவலர் வில்வேந்தன், விதை அலுவலர் ஆல்வின், உதவி வேளாண்மை அலுவலர்கள் வேல்முருகன், கதிரவன், பாலசந்திர மூர்த்தி, முத்து சரவணன், புவனேஸ்வரி, அட்மா மேலாளர் பாக்கியராஜ், துணை மேலாளர் பாலமுருகன், பயிர் அறுவடை பணியாளர்கள் கண்ணன், சுரேஷ் ஆகியோர் செய்திருந்தனர். மேல்புளியங்குடி, குணமங்கலம், சாத்தமங்கலம், ஆதிவராகநல்லூர், கொக்கரசன் பேட்டை, காவனூர், ஆத்தூர் கிராம முதன்மை விவசாயிகள், விவசாய பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



# செலவற்ற இயற்கை விவசாயமும் செறிவூட்டப்பட்ட மண் வளமும் சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையத்தின் மூலம் நடைபெற்றது




திருச்சி, செப்.21

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் சிறுகமணி வேளாண்மைஅறிவியல் நிலையத்தின் மூலம் பல்வேறு பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, செலவற்ற இயற்கை விவசாயமும் செறிவூட்டப்பட்ட மண்வளமும் என்ற தலைப்பில் ஒரு நாள் நிலையப் பயிற்சி 20.9.24 அன்று நடைபெற்றது.

இப்பயிற்சியில் வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங் கிணைப்பாளர் முனைவர் சி ராஜாபாபு இயற்கை வேளாண்மையின் முக்கியத்துவம், இயற்கை இடுபொருட்கள் தயாரிப்பு, இயற்கை முறையில் பயிர் சாகுபடி தொழில் நுட்பங்கள், மண்வள பாதுகாப்பு மற்றும் மேலாண்மை குறித்து விவசாயிகளுக்கு விரிவாக எடுத் துரைத்தார். மேலும் இயற்கை விவசாயத்தை கடைபிடிப்பதன் மூலம் ஏற்படும் நன்மைகள்குறித்துவிளக்கினார். இயற்கை விவசாயத்தின் முன்னோடி விவசாயி நல்லையா இயற்கை இடுப்பொருட்கள் அளிப்பதன் மூலம் பயிர் வளர்ச்சிக்கு ஏற்படும் நன்மைகள் குறித்த தனது அனுபவங்களை பகிர்ந்தார். மேலும் திருச்சி மாவட்ட முன்னோடி விவசாயிகள் இயற்கை வேளாண்மயில் தங்களது தனிப்பட்ட அனுபவங்கள் மற்றும் கருத்துக்களை பங்கு பெற்ற விவசாயிகளிடையே பகிர்ந்து கொண்டனர். நடராஜன் இயற்கை இடுபொருட்கள் தயாரிப்பு குறித்து விளக்கினார். ரிச்சர்டு அந்தோணிசாமி மற்றும் சரவணன் ஆகியோர் இயற்கை முறையில் நெல் மற்றும் பயறு வகை பயிர்கள் சாகுபடி குறித்த அனுபவங்கள் பகிர்ந்தனர். சின்னதுரை இயற்கை முறையில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை உபயோகிப்பது நமது ஆரோக்கியத்தை அதிகரிக்கும் என எடுத்துரைத்தார். கிருபாங்கர் இயற்கை இது பொருட்களை சந்தைப்படுத்துதலில் உள்ள வழிகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கினார். மூர்த்தி புதிய தொழில்நுட்பங்களை விவசாயி களிடையே கொண்டு சேர்ப்பதில் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் பங்கு அலப்பரியது என கூறினார். இப்பயிற்சியில் திருச்சி மாவட்டத்தின் பல்வேறு வட்டாரங்களில் இருந்து 40 விவசாயிகள் பங்கு பெற்று பயனடைந்தனர்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் ICASF'24- வேளாண் மின்னழுத்தம் மற்றும் விவசாயத்தில் நிலைத்தன்மை குறித்த சர்வதேச மாநாடு



கோயம்புத்தூர், செப்.21

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் (TNAU) கோயம்புத்தூர், இங்கிலாந்தின் டீசைட் பல்கலைக்கழகத்துடன் இணைந்து SPARC & UKIERI திட்டத்தின் கீழ் 19.9.24 அன்று வேளாண் மின்னழுத்தம் மற்றும் விவசாயத்தில் நிலைத்தன்மை குறித்த சர்வதேச மாநாட்டை வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் (ஐஎஸ்ஓ 21001:2018 சான்று அளிக்கப்பட்ட நிலையம்) நடத்தியது. இந்நிகழ்ச்சியில் பல்வேறு துறைகளைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள், மாணவ, மாணவியர் என சுமார் 200 பேர் கலந்து கொண்டனர்.

இங்கிலாந்தின் சர்வதேச முதன்மை ஆய்வாளர் (UKIERI) டீசைட் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் செந்திலராசு சுந்தரம், வேளாண் மின்னழுத்தம் மற்றும் நிலையான விவசாய நடைமுறைகள் குறித்த விவாதங்களுக்கான ஒரு முக்கிய மன்றமாக இந்த மாநாடு வடிவமைக்கப்பட்டுள்ளது என்று விளக்கினார்.

வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதன்மையர் முனைவர் அ.ரவிராஜ், தனது வாழ்த்து உரையில் வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நிலையான தீர்வுகள் மற்றும் வேளாண் மின்னழுத்தத்தை குறித்துமேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் எடுத்துரைத்தார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் முனைவர் வெ.கீதாலட்சுமி தொடக்க விழாவிற்குத் தலைமை தாங்கி மாநாட்டு கட்டுரைகளை வெளியிட்டார். பேராசிரியர் வெ.கீதாலட்சுமி தனது தொடக்க உரையில், SPARC & UKIERI திட்டத்தின் நோக்கம் வேளாண் மின்னழுத்தம் வடிவமைப்பு மற்றும் நிகர பூஜ்ஜிய விவசாயத்திற்கான நிறுவலை

நிவர்த்தி செய்வதற்கான ஒரு ஆராய்ச்சி கூட்டமைப்பை உருவாக்க உள்ளதாக எடுத்துரைத்தார். மேலும் எதிர்காலத்தில் விவசாய நிலைத்தன்மை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் அனைத்து துறைகளிலும் நடைமுறையில் இருக்கும் என்று தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து 'நீர்-ஆற்றல்-உணவு தொடர்பு மூலம் நிகர-பூஜ்ஜியத்தை அடைவது' குறித்து இங்கிலாந்து லண்டன் சவுத் பாங்க் பல்கலைக்கழக பேராசிரியர் ஹரி உபாத்யாயா, 'திறமையான HVAC அமைப்புடன் விளைச்சலை அதிகரிக்க செங்குத்தான விவசாயம்' குறித்து இங்கிலாந்து டீசைட் பல்கலைக்கழக பேராசிரியர் குமார் பாச்சிகொல்லா, 'ரென்கூப் பேனலுடன் காலநிலை நெகிழ்திறன் விவசாயம்' குறித்து பெங்களூரு ரென்கூப் சோலார் எனர்ஜி பிரைவேட் லிமிடெட் இணை நிறுவனடாக்டர் லட்சுமி சந்தானம், 'சுற்றறிக்கை பொருளாதாரம்-செயல்படுத்தும் அணுகுமுறைகள்' குறித்து டீசைட் பல்கலைக்கழகபேராசிரியர் டேவிட் ஹியூஸ் மற்றும் 'ஸ்மார்ட் எனர்ஜி சிஸ்டம்ஸ் இன் சஸ்டைனபிள் எனர்ஜி நெட்வொர்க் குறித்து இங்கிலாந்து டீசைட் பல்கலைக்கழக பேராசிரியர் மைக்கேல் சார்ட்ஸ் உரையாற்றினர்.




வேளாண் மின்னழுத்த தொழில்நுட்பங்கள் மற்றும் வளர்ந்து வரும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வேளாண் பொறியியல் தலையீடுகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய தொழில்கள் குறித்த அறிவு பரிமாற்றத்திற்கு ஏற்ப தொடர்ச்சியான தொழில் நுட்ப அமர்வுகள், வாய்வழி மற்றும் மின் சுவரொட்டி கட்டுரைகள் இந்த நிகழ்வில் இடம்பெற்றன. இம்மாநாட்டில் 20 வல்லுனர்கள் கொண்டு ஐஐடி, தில்லி மற்றும சுவ்லெக்ட்போன்ற தொழிற் சாலைகளுடன் சேர்ந்து சிறப்பு முன்னுரை கட்டுரைகளை எடுத்துரைத்தனர். இந்த மாநாடு விஞ்ஞானிகள்/ஆராய்ச்சி யாளர்கள், முதுகலை/முனைவர் பட்டங்களின் வலுவான வலையமைப்பை உருவாக்கியுள்ளது. பேராசிரியர் ஆர்.மகேந் திரன் மற்றும் பேராசிரியர் மற்றும் தலைவர் டி.ரமேஷ் மாநாட்டு நிகழ்வுகளை எடுத்து நடத்தினர்.

# பட்டுப்புழு வளர்ப்பு பற்றி அறிய மாவட்டத்திற்குள் விவசாயிகள் பட்டறிவு பயணம்



திண்டுக்கல், செப்.21

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் வட்டார விவசாயிகள் அட்மா திட்டத்தின் கீழ் வேளாண்மை உதவி இயக்குநர் சந்திரமோகன் அவர்களது அறிவுரையின்பேரில், மல்பெரி இரகம் மற்றும் பட்டுப்புழு வளர்ப்பு பற்றி தெரிந்துகொள்வதற்கு மாவட்டத்திற்குள் விவசாயிகள் பட்டறிவு பயணத்திற்கு சாணார்பட்டி வட்டாரத்திற்குட்பட்ட கூவனுத்து கிராமத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். ரெட்டியார்சத்திரம் வட்டார விவசாயிகள் பாலசுப்பிரமணி மற்றும் பொன்னுச்சாமி ஆகியோரது பட்டுப்புழு வளர்ப்பு மனை அவர்களது தோட்டத்தில் நடவு செய்யப்பட்ட வி.1 மற்றும் எம்.ஆர்.2 இரக மல்பரி நடவு வயலினை பார்வையிட்டு தமது சந்தேகங்களை விவசாயி களிடம் கேட்டுத் தெரிந்து கொண்டனர்.

மேலும் கூவனுத்து விவசாயி பாலசுப்பிரமணி, பட்டு வளர்ப்பில் அதிக மல்பெரி இலை உற்பத்தி செய்யும் தொழில்நுட்பம், பட்டுப்புழு கழிவுகளை நன்கு மக்கவைத்து இயற்கை உரம் தயாரித்து மல்பரி தோட்டத்துக்கு பயன்படுத்தினால் மண்ணில் தழைச்சத்து அதிகரித்து நல்ல தரமான இலைகளை உற்பத்தி செய்ய முடியும் என்று கூறினார். விவசாயிகள் மல்பரி நாற்று விற்பனை செய்தால் கூடுதல் வருமானம் கிடைக்கும் எனவும் கூறினார். சொட்டுநீர் பாசனம் அமைக்கும் முறை மற்றும் முதிர் பட்டுப்புழு வளர்ப்பின்போது கையாள வேண்டிய நோய் தடுப்பு முறைகள் மற்றும் நோய்கான காரணிகள் பற்றியும் ரெட்டியார் சத்திரம் விவசாயிகள் தெரிந்து கொண்டனர். இலைப்பேன் மற்றும் குருத்துப்புழு பாதிப்புகளை கட்டுப்படுத்தும் ட்ரைக்கோ கிராம்மா' ஒட்டுண்ணி பயன்படுத்தும் முறை குறித்தும் விவசாயிகள் தெரிந்து கொண்டனர். இப்பட்டறிவு பயணத்திற்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் சுகன்யா மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் பொன் தமிழரசு மற்றும் அருண்குமார் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.

# புங்கம் பிண்ணாக்கின் உரச்சத்துக்கள் !

புங்கம் பிண்ணாக்கிலுள்ள உரச்சத்துக்களான நைட்ரஜன் 5.1%, பாஸ்பரஸ் – 1.1 %, பொட்டாஷ்– 13%, சோடியம் ஆக்ஸைடு 0.8%, கரும்புப் பயிருக்கு பிண்ணாக்கை சிறப்பு உரமாக உபயோகிக்கலாம் அதனால் சிவப்பு எறும்புகளின் தொல்லையும் இருக்காது.

அனைத்துப் பயிர்களுக்கும் 50-60 கிலோ புங்கம் பிண்ணாக்கை வயலில் இடலாம்.

காப்பி செடிகளுக்கும். தக்காளிக்கும் புங்கம் பிண்ணாக்கை உரமிட்டால், நூற்புழுக்களின்– குறிப்பாக வேர் முடிச்சுகளை ஏற்படுத்தும் இனத்தின் தாக்கம் குறையும்.




யூரியா, அம்மோனியம் சல்பேட் ஆகியவற்றுடன் பிண்ணாக்கையும் கலந்து உரமிட்டால், இந்த உரங்கள் நைட்ரேட்டாக மாறாமல், அம்மோனிய சத்தாக நீண்ட நாட்கள் நிலைக்கும். இதன்காரணமாக நஞ்சைப் பயிருக்கு உரமிட ஏற்றதாகும்.

யூரியா உரத்தை அம்மோனிய உரமாக மாற்றும் யூரியேஸ் (ஷீஷைளழிவிள) என்ற என்ஸைம். பிண்ணாக்கில் உள்ளது. அதிகமாக நீர் வடியும் இடங்களில், பிண்ணாக்குடன் யூரியாவை கலந்து உரமிட்டால், உரச்சத்து வீணாவது குறையும்.

பிண்ணாக்கிலுள்ள புரதப்பகுதியை சோடியம் கார்பனேட் மூலம் தனித்துப் பிரித்து, ஒட்டுப்பசை தயாரிக்கலாம். இப்பசையை பூச்சிக்கொல்லி இரசாயனங்களுடன் கலந்து தெளித்தால். பூச்சிக்கொல்லி நன்கு செடிகளில் பரவி ஒட்டிக் கொள்ளும், இதனால் பூச்சிக்கொல்லியின் திறனும் அதிகரிக்கிறது என சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் வேலு தெரிவித்தார்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# அட்மா திட்டத்தின் கீழ் கரும்பு சாகுபடி குறித்து விவசாயிகள் பயிற்சி




சிவகங்கை. செப்.21

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டாரம், பச்சேரி கிராமத்தில் விரிவாக்க சீரமைப் பிற்கான உறுதுணை திட்டம் (அட்மா) திட்டத்தின் கீழ் கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு நீடித்த நிலையான கரும்பு சாகுபடி (Sustainable Sugarcane Initiative (SSI) பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியில் மானாமதுரை வேளாண்மை உதவி இயக்குநர் ஜா.இரவிசங்கர் தலைமை வகுத்து கரும்பு சாகுபடியில் நீடித்த நிலையான கரும்பு சாகுபடி திட்டத்தின் குறிக்கோள்கள், கடைபிடிக்கப்படும் முறைகள், குழித்தட்டுநாற்றங்கால் மூலம் ஒரு பருகரணை மூலம் நாற்றாங் கால் அமைத்து கரும்பு நாற்றுகள் நடவு செய்வது, 5 அடிக்கு 2 அடி பட்டம் அமைத்து நடவு செய்தல், கரும்பிற்கு சொட்டுநீர் பாசனம் அமைத்து நீர் மற்றும் உரம் இடுதல், இம்முறையினால் கூடுதலாக உருவாகும் கரும்புகளின் எண்ணிக்கை, அதனால் ஏற்படும் மகசூல் அதிகரிப்புமற்றும் வரிசைகளுக்கு இடையில் ஊடுபயிர் சாகுபடி செய்தல் குறித்து எடுத்துரைத்தார். மேலும் கரும்பு தோகையினை Waste Decomposer கொண்டு உரமாக்குதல் குறித்து எடுத்துரைத்தார்.

இப்பயிற்சியில் சக்தி சர்க்கரை ஆலையின் துணை பொது மேலாளர் வேணுகோபால் கலந்து கொண்டு நடப்பில் உள்ள கரும்பு இரகங்கள், புதிதாக வந்துள்ள புன்னகை இரக கரும்பு, அதன் மகசூல் திறன், உரப்பரிந்துரைகள் குறித்து எடுத்துக் கூறினார். மானாமதுரை திரவ உயிர் உர உற்பத்தி மையத்தின் மூத்த வேளாண் அலுவலர் கருணாநிதி கலந்து கொண்டு கரும்பு பயிரில் ஏற்படும் பூச்சி மற்றும் நோய்கள் அதற்கான கட்டுப்பாட்டு முறைகள் குறித்து எடுத்துரைத்தார். சக்தி சர்க்கரை ஆலையின் கரும்பு அலுவலர் இராஜேஷ் கலந்து கொண்டு கரும்பிற்கு வேண்டிய நுண்ணூட்ட உரங்கள், நீடித்த நிலையான கரும்பு சாகுபடி தொழில் நுட்பத்தை செயல்படுத்துவதில் இப்பகுதியில் உள்ள சவால்கள் தொடர்பாக விளக்கிக் கூறினார். இப்பயிற்சியில் 40 கரும்பு விவசாயிகள் கலந்து கொண்டனர். மானாமதுரை துணை வேளாண்மை அலுவலர் சப்பாணிமுத்து தற்போது செயல்படுத்தப் படும் திட்டங்கள் குறித்து விளக்கினார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட அலுவலர்கள் செய்திருந்தனர்.

# வேளாண்மையில் பாரம்பரிய தொழில்நுட்பங்கள்

1. 1 லிட்டர் வேப்ப எண்ணெயில் 3 கிலோ நுண்மணல் மற்றும் 3 கிலோ சாணத்தை 3 நாட்கள் ஈரம் காயாமல் ஈரச்சாக்கு கொண்டு போர்த்தி குவியலாக வைத்து 4ஆம் நாள் அதை 150 லிட்டர் நீரில் கலந்து ஏக்கருக்கு தெளிக்க சாறு உறிஞ்சும் பூச்சிகளைக் கட்டுப்படுத்தலாம்.

2. 10 கிலோ காய்ந்த சாணத்தை தூளாக்கி அத்துடன் செங்கல் சூளை சாம்பல் சேர்த்து அதிகாலை வேளையில் தூவினால் சாறு உறிஞ்சும் பூச்சி சாம்பல் மற்றும் துருநோயைக் கட்டுப்படுத்தலாம்.

3. வெட்டி வேர் புல்லை மண் சரிவுக்கு குறுக்காகவோ அல்லது வயலைச் சுற்றி நட்டால் மண் அரிப்பைத் தடுக்கலாம்.

4. கிணற்றுக்கு அருகில் பூவரசு மரத்தை வளர்த்தால் கிணற்று நீர் ஆவியாவதைக் குறைக்கலாம்.

5. கோரைப்புல்லைக் கட்டுப்படுத்த கொள்ளுப்பயிரைச் சாகுபடி செய்யலாம்.

6. எருக்கு இலை மற்றும் வேப்பம்புண்ணாக்கை மண் கலத்தில் இட்டு மூழ்குமாறு நீர் ஊற்றி வயலில் வைத்தால் அந்த வாடையால் அந்திப்பூச்சிகள் கவரப்படும்.

7. ஊமத்தை காயோடு, எருக்கு இலையை அரைத்து 15 நாட்கள் நீரில் ஊற வைத்து வடிகட்டி தெளித்தால் அனைத்து வகைப்பூச்சிகளையும் கட்டுப்படுத்தலாம்.

8. பிரண்டையை வயலைச்சுற்றி நட்டால் கரையான் தொல்லை குறையும்.

9. 1 கிலோ வசம்புத் தூளை 50 கிலோ தானியத்தோடு கலந்து சேமித்தால் 1 வருடம் வரை பூச்சித் தாக்குதல் இல்லாமல் இருக்கும்.

10. 10 சதவீதம் உப்புக் கரைசலில் சாக்குப்பையை நனைத்து பின் காயவைத்து அதில் பயறு வகைகள் மற்றும் தானியங் களை சேமித்தால் பூச்சித் தாக்குதலைக் கட்டுப்படுத்தலாம் என்று சேலம் மாவட்டம், வீரபாண்டி வேளாண்மை உதவி இயக்குநர் பா.கார்த்திகாயினி கேட்டுக்கொண்டுள்ளார்.

# பெருந்துறை வட்டாரத்தில் நீடித்த நவீன கரும்பு சாகுபடி குறித்த தொழில்நுட்ப பயிற்சி

ஈரோடு, செப்.21

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டரரம், வேளாண்மை உழவர் நலத்துறை, மூலம் செயல்படுத்தப்படும் வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் மூலம் பெத்தாம்பாளையம் வருவாய் கிராமத்தில் நீடித்த நவீன கரும்பு சாகுபடி பயிற்சியானது



பெருந்துறை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் க.பிரசாத் தலைமையில் நடைபெற்றது.



இப்பயிற்சிக்கு சக்தி சர்க்கரை ஆலையின் துணை பொது மேலாளர் தேவராஜ், பேசுகையில் கரும்பு நாற்று தயார் செய்யும் போது கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள் பற்றியும் நல்ல தரமான விதைக் கரணை தேர்வு மற்றும் பயிர் சாகுபடி முறைகள் பற்றியும் பூச்சி, நோய் தாக்குதல் முறை பற்றியும் அவற்றை கட்டுப்படுத்தும் முறை பற்றியும் விவசாயிகளுக்கு தெளிவாக எடுத்துரைத்தார். மேலும் சக்தி சர்க்கரை ஆலையின் மூத்த மேலாளர் ஸ்ரீதர், பேசுகையில் ஒரு பரு கரணை நடவு செய்வதன் மூலம் ஏற்படும் நன்மைகள், நீடித்த நிலையான கரும்பு சாகுபடியில் இயந்திரமயமாக்குதலின் மானிய விவரங்கள் குறித்தும் விவசாயி களுக்கு விரிவாக எடுத்துரைத்தார். துணை வேளாண்மை அலுவலர் அருள்மொழிவர்மன், வேளாண்மை துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் வேளாண் கிடங்கில் இருப்பில் உள்ள உயிர் உரங்கள், நுண்ணுட்டங்களை பயன் படுத்தப்படும் முறை குறித்தும் மானிய விவரங்கள் பற்றியும் விரிவாக எடுத்து கூறினார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை கரும்பு ஆய்வாளர், உதவி கரும்பு ஆய்வாளர்கள், உதவி வேளாண்மை அலுவலர், மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் ஆகி யோர்கள் அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருந்தனர். இப்பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு மதிய உணவு மற்றும் ஊக்கத்தொகை வழங்கப்பட்டது.

# வத்தலக்குண்டு வட்டாரத்தில் வேளாண்மை பொறியியல் துறை சார்பில் விவசாயிகளுக்கு பயிற்சி

திண்டுக்கல், செப்.21

திண்டுக்கல் மாவட்டம், வத்தலக்குண்டு வட்டாரத்தில் அட்மா திட்டத்தின் கீழ் கலைஞரின் அனைத்து கிராம வேளாண் வளர்ச்சி திட்டம் – கணவாய்பட்டி கிராமத்தில் வேளாண்மை பொறியியல் துறையின் மூலம் விவசாயிகளுக்கு நுண்ணீர் பாசன அமைப்பு மற்றும் தானியங்கி மோட்டார் பராமரிப்பு பற்றிய பயிற்சி நடை பெற்றது. இப்பயிற்சியை வேளாண்மை உதவி இயக்குநர் எஸ். நாகேந்திரன், விவசாயிகளை வரவேற்று, வேளாண்மை துறையில் உள்ள திட்டங்களையும் மானிய விபரங்களையும் விவசாயிகளுக்கு தெளிவாக எடுத்துக்கூறினார். பின்பு வேளாண்மை பொறியியல் துறை உதவி பொறியாளர் P.சிவலிங்கம், வேளாண்மை பொறியியல்



துறையின் திட்டங்களை, மானியத்துடன் எவ்வாறு பெறுவது பற்றிய செய்திகளையும், வேதாந்தா தெளிப்பு நீர் பாசன நிறுவனத்தின் விற்பனை உதவி மேளாளர் சண்முகவேல், நுண்ணீர் பாசனத்தில் ஏற்படும் நன்மைகளை பற்றியும், செயல் விளக்கமும் அளித்தார். பின்பு வட்டார தொழில் நுட்ப மேளாளர் க.சப்பாணி முத்து அட்மா திட்டத்தில் உள்ள விபரங்களை எடுத்து கூறினார். இந்நிகழ்ச்சியின் ஏற்பாடுகளை வட்டார உதவி தொழில் நுட்ப மேளாளர் ம.மகேந்திரன் மற்றும் விஜயலெட்சுமி செய்திருந்தனர்.

## விவசாயிகள் ஆலோசனை குழு கூட்டம் நடைபெற்றது




விழுப்புரம், செப்.21

விழுப்புரம் மாவட்டம், கண்டமங்கலம் வட்டாரத்தில், அட்மா திட்டம் மூலம் வட்டார அளவிலான விவசாயிகள் ஆலோசனை குழு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு வேளாண்மை உதவி இயக்குனர் சுமதி தலைமை தாங்கினார். சகோதரத்துறைகளான தோட்டக்கலைத்துறை, வேளாண் விற்பனை துறை, வேளாண் பொறியியல் துறை மற்றும் கால்நடைத்துறையில் இருந்து அதிகாரிகள் கலந்து கொண்டனர். தோட்டக்கலை துறையின் மூலம் தோட்டக்கலை அலுவலர் பிறைசூடன் கலந்து கொண்டு மானிய விலையில் பழ மரக்கன்றுகள் மாடித்தோட்டம் பந்தல் காய்கறிகள் பற்றி விரிவாக கூறப்பட்டது. வேளாண் பொறியியல் துறை மூலம் இளநிலை பொறியாளர் சிவானந்தம் கலந்து கொண்டு 50 சதவீத மானியத்தில் டிராக்டர் வேளாண் இயந்திரங்கள் குறைந்த வாடகைக்கு எடுத்து விவசாயிகள் பயன்படுத்தலாம் என கூறினார். கால்நடைத்துறை மூலம் மருத்துவர் பாரிவேல் கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்கள் மடி நோய் மஞ்சள் காமாலை நோய் குடற்புழு நீக்கம் மற்றும் உன்னி கட்டுப்பாடு பற்றி விரிவாக கூறினார். மேலும் கூட்டத்தில் வேளாண்மை அலுவலர் விஜய் துணை வேளாண்மை அலுவலர் சுப்புராஜ் வட்டார தொழில்நுட்ப மேலாளர் தேன்மொழி உதவி வேளாண்மை அலுவலர்கள் சீனிவாசன் பரிமளா உதவி தொழில் நுட்பமேலாளர்கள் அருள்பாபு, வீரமணி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# கூடுதல் மகசூல் பெற திருந்திய நெல் சாகுபடி முறை அவசியம்

திருந்திய நெல் சாகுபடி முறை என்பது சாதாரண நெல் சாகுபடி முறையில் சில மாற்றங்களை ஏற்படுத்தி குறைந்த செலவில் அதிக மகசூலை பெறும் வகையில் உருவாக்கப்பட்ட முறை.

**திருந்திய நெல் சாகுபடியின் முக்கிய அம்சங்கள்**

1. இளநாற்று (14 நாட்கள் வயதுடைய நாற்றுகள்)

2. அதிக இடைவெளியில் ஒற்றை நாற்று சதுர நடவு (22.5X22.5 செ.மீ)

3. நன்செய் நிலத்திற்குரிய சுழல் கூம்பு வடிவ களை எடுக்கும் கருவி (கோனோவீடர்) மூலம் களைகளை அமுக்கி சேற்றை கலக்கி விடுதல்

4. அங்கக கழிவுகளை உபயோகித்து பச்சை வண்ண அட்டை மூலம் தழைச்சத்து நிர்வகித்தல்.

5. சிக்கன நீர்ப்பாசனம்

**திருந்திய நெல் சாகுபடி முறையை விவசாயிகள் ஏன் கடைபிடிக்க வேண்டும் ?**

குறைந்த சாகுபடிச் செலவு, ஏக்கருக்கு 2-3 கிலோ விதை போதுமானது. ஏக்கருக்கு ஒரு சென்ட் நாற்றங்கால் போதுமானது. குத்துக்கு ஒரு நாற்று போதுமானது.

களைகளைக் கட்டுப்படுத்த களைக்கருவி உபயோகிப்பதால் ஆட்செலவு குறைவு, வயலில் நீரைத் தேக்கி வைக்க வேண்டிய அவசியமில்லை.

அதிக வேர் வளர்ச்சி, அதிக ஊட்டச்சத்து உபயோகத்திறன், அதிக கதிர்கள், அதிக மணிகள், அதிக மகசூல்.

**நாற்றங்கால்**

நடவு வயலின் ஓரத்தில் 1x5* அளவுள்ள 8 மேடைகளை அருகிலிருக்கும் மண்ணை எடுத்து உருவாக்க வேண்டும்.

நிலப்பரப்புக்கு மேல் 5 செ.மீ உயரம் மேடை அமைத்த பின் மேடை மேல் பாலித்தீன் தாளையோ அல்லது பிரித்த உரச் சாக்குகளையோ பரப்பிவிட வேண்டும்.

மீண்டும் 4 செ.மீ உயரத்திற்கு மண்ணை நிரம்பிவிட வேண்டும்.

விதை நேர்த்தி செய்ய ஒரு கிலோ விதைக்கு சூடோமோனாஸ் 10 கிராம் மற்றும் அசோபாஸ் உயிர் உரம் 3 கிலோ விதைக்கு ஒரு பாக்கெட்(200 கிராம்) என்ற அளவிலும் பயன்படுத்த வேண்டும். ஒவ்வொரு 5 செ.மீ மேடையிலும் 375 கிராம் விதையை முளை கட்டிய பின் பரவலாக விதைக்க வேண்டும்.

**நடவு செய்தல்**

குறுவை மற்றும் சம்பா பருவத்தில் ஹெக்டருக்கு 12.5டன் மக்கிய குப்பை அல்லது தொழு உரத்தை இட்டு நன்கு உழவு செய்யவும். பின் நிலத்தை நன்கு சமன் செய்யவும். பரிந்துரைக்கப்படும் முழு அளவு மணி சத்துடன் பாதி அளவு சாம்பல் சத்தை அடியுரமாக கடைசி உழவின் போது இடவும்.இத்துடன் 25 கிலோ ஜிங்க் சல்பேட் இடவும். தழைச்சத்தை அடியுரமாக இட தேவையில்லை.

**சிக்கன நீர்ப்பாசனம்**

மண் மறைய நீர்க்கட்டுதல் முதல் 10 நாட்களில் மிக முக்கியம் அதன் பின்னர் ஒரு அங்குல உயரத்திற்கு நீர் கட்டி மறைந்து மண்ணில் சிறு கீறல் ஏற்படும் தருணம் அடுத்த முறை நீர்ப் பாய்ச்சுதல் வேண்டும்.இம்முறை இளங்கதிர் உருவாகும் பயிர்ப் பருவம் வரை பின்பற்றப்பட வேண்டும்.

இளங்கதிர் உருவான பிறகு 2 அங்குலம் அளவிற்கு நீர்ப்பாய்ச்சி எட்டிய நீர் மறைந்த உடன் மீண்டும் நீர்க்கட்டிட வேண்டும்.

**கோனோவீடர் கருவி மூலம் களை கட்டுப்பாடு**

நடவு செய்த 15 ம் நாள் முதல் 3 அல்லது 4 முறை கருவி மூலம் வரிசைக்கு வரிசை மற்றும் செடிக்கு செடி உள்ள இடைவெளியில் இடை உழவு செய்து களைகளை சேற்றில் அமுக்கிவிட வேண்டும்.

**இடுபொருள் சிக்கனம்**

பச்சை வண்ண அட்டை மூலம் தழைச்சத்து இடுவதால் ஹெக் டருக்கு 15 முதல் 45 கிலோ வரை தழைச்சத்தை மிச்சப்படுத்தலாம்.

இவ்வாறு குறைந்த நீரில் அதிக உற்பத்தித் திறன் கொடுக்கக்கூடிய திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பத்தை செயல்படுத்தி பயன் பெறுவோம்.

தகவல் : **விஸ்வப்பிரியா, விசாலினி, முத்து ஸ்ரீ அபிராமி, அப்ஸானா சஃப்ரீன், நான்காம் ஆண்டு இளநிலை வேளாண் மாணவிகள், காந்திகிராம கிராமிய பல்கலைக்கழகம், திண்டுக்கல்.**

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**